AVIVA
| Life Insurance |

INDIA PARTNER Dabur GROUP

# அவிவா ஜன சுரக்ஷா



### அவிவா ஜன சுரக்ஷா - ஒரு தனி நபர், இணைக்கப்படாத, பங்கு பெறாத, பியூர் ரிஸ்க் லைஃப் இன்ஸ்யூரன்ஸ் பிளான்

வாழ்க்கை என்பது முழுவதும் நிச்சயமில்லாத் தன்மையைக் கொண்டது மற்றும் உங்கள் அன்பிற்கு உரியவர்களின் எதிர்காலத்தை நீங்கள் பாதுகாத்திட வேண்டும். ஒரு வேளை ஏதாவது துரதிர்ஷ்டம் உங்களுக்கு நேர்ந்தால், உங்கள் குழந்தைகளை யார் பார்த்துக் கொள்வார்கள், குழந்தைகளின் கல்வி / திருமணம் ஆகியற்றிற்கு எங்கிருந்து பணம் வரும் மற்றும் ஒரு வேளை நீங்கள் ஏதாவது கடன் வாங்கி இருந்தால், யார் அதை திரும்பச் செலுத்துவார்கள்?

ஜன சுரக்ஷா என்பது ஒரு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் அது உங்கள் குழந்தையின் எதிர்காலத்தைப் பாதுகாக்க உங்களுக்கு உதவுகிறது. இழந்த ஒரு உயிருக்கு இழப்பீடு எதுவும் நிகராகாது என்ற போதும், ஒரு வேளை உங்களுக்கு ஏதாவது துரதிர்ஷ்டம் ஏற்பட்டால், ஜன சுரக்ஷா அவர்களது நிதித் தேவைகளை சந்திப்பதை உறுதி செய்கிறது.

### இதன் நோக்கம்

- உங்களுக்கு துரதிர்ஷ்டவசமாக மரணத்தினால் ஏற்படும் ஆபத்தில் இருந்து உங்களைச் சார்ந்தவர்களுக்கு நிதிப் பாதுகாப்பை வழங்குவதாகும்.

### அவிவா ஜன சுரக்ஷா என்றால் என்ன?

- அவிவா ஜன சுரக்ஷா என்பது ஒரு குறைந்த விலையிலான ஆயுள் காப்பீட்டுத் திட்டம் அது பாலிசி காலத்தில் ஒரு வேளை நீங்கள் மரணமுற நேர்ந்தால், ஒரு ரொக்கத் தொகையை வழங்குவதற்கு உத்திரவாம் அளிக்கிறது. ரெகுலர் பிரீமியம் செலுத்துவது அல்லது ஒரே ஒரு பிரீமியம் செலுத்துவது ஆகியவற்றில் இருந்து தேர்வு செய்து கொள்ள உங்களுக்கு சலுகை உள்ளது. ஒரே ஒரு பரிமீயிம் செலுத்துவது தேர்வு செய்யும் பொழுது வேறு எந்தப் பிரீமியமும் செலுத்தத் தேவை இல்லை.
- அவிவா ஜன சுரக்ஷாவை 18 முதல் 45 வயது வரையின் இடையில் இருக்கும் எந்த வயதினரும் வாங்கிக் கொள்ள முடியும். இந்தப் பாலிசியை 5 வருடங்கள் அல்லது 10 வருடங்கள் என்ற காலத்திற்கு வாங்கிக் கொள்ள முடியும் மற்றும் பாலிசி முடியும் தருவாயில் ஆயுள் காப்பீட்டாளரின் அதிக பட்ச வயது முறையே 50 வருடங்கள் அல்லது 55 வருடங்களாக இருத்தல் வேண்டும்.
- அவிவா ஜன சுரக்ஷாவை, குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதிக்கு (அன்டர் ரைட்டிங்) உட்பட்டு எந்தத் தொகைக்கும் அதாவது ரெகுலர் பிரீமியத்திற்குக் குறைந்தபட்ச ரொக்கக் காப்பீடான ₹30,000 மற்றும் ஒரே ஒரு பிரீமியத்திற்கு ₹25,000 எனவும் அதிகபட்ச ரொக்கக் காப்பீடான ₹50,000 எனவும் வாங்கிக் கொள்ள முடியும்.
- குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வருடாந்திர / ஒரே ஒரு பிரீமியமானது குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச ரொக்கக் காப்பட்டின் அடிப்படையில் அமையயும்.

### இந்தத் திட்டத்தின நன்மைகள் என்னென்ன?

- பாலிசி காலத்தின் பொழுது ஒரு வேளை துரதிர்ஷ்டவசமாக உங்களுக்கு மரணம் ஏற்படுமாயின், இந்த ரொக்கக் காப்பீடானது உங்கள் நாமினிக்கு வழங்கப்படும். ஒரு வேளை மரணமானது விபத்தின் மூலமாக இருந்தால், ரொக்கக் காப்பீட்டின் இரு மடங்குத் தெகைக்கு நிகரானத் தொகை உங்கள் நாமினிக்கு வழங்கப்படும்.
- எந்தவிதமான மருத்துவப் பரிசோதனைக்கும் நீங்கள் உங்களை உட்படுத்திக் கொள்ளத் தேவை இல்லை.
- அரசாங்கம் அறிவித்தபடி மற்றும் அவ்வப்பொழுது செய்யப்படும் மாற்றங்களுக்கும் உட்பட்டு, நீங்கள் செலுத்திய பிரீமியங்கள் வருமான வரிச்சட்டம், 1961, பிரிவு 80C இன் கீழ் வரித் தள்ளுபடிக்குத் தகுதி பெறுகிறது.

## விளக்கம்

இந்த விளக்கமானது ஒரு ரொக்கக் காப்பீடான ₹30,000 க்கு

| பிரீமிய வீதம் | பாலிசி காலம் (வருடங்களில்) | பிரீமியம் (₹) வயதுக் குழுவிற்கு | | |
|---|---|---|---|---|
| | | 18 – 35 | 36 – 40 | 41 - 45 |
| வருடாந்திரப் பிரீமியம் | 5 | 210 | 236 | 270 |
| | 10 | 210 | 236 | 270 |
| ஒரே ஒரு பிரீமியம் | 5 | 780 | 900 | 1050 |
| | 10 | 1260 | 1560 | 1920 |

''வருடாந்திரப் பிரீமியம்'' என்பது, வரிகள், ரைடர் பிரீமியம், அன்டர் ரைட்டிங் கூடுதல் பிரீமியம் மற்றும் மோடல் பிரீமியங்களின் லோடிங், ஏதாவது இருந்தால், அவை நீங்கலாக, பாலிசிதாரர் செலுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ஆகும்.

''ஒரே ஒரு பிரீமியம்'' என்பது வரிகள், ரைடர் பிரீமியங்கள் மற்றும் அன்டர் ரைட்டிங் கூடுதல் பிரீமியங்கள், ஏதாவது இருந்தால் அவை நீங்கலான தொகையாகும்.

## கூடுதல் விவரங்கள்

- கருணைக் காலம்

  ''கருணைக் காலம் என்றால்'' பிரீமியத்தை செலுத்துவதற்கு உரிய நாளில் இருந்து கூடுதல் காலத்திற்குள், எந்தவித அபராதம் அல்லது தாமதக் கட்டணம் ஆகியவை இன்றி செலுத்துவதற்கு காப்பீட்டாளர் அளிக்கும் காலம் ஆகும், இந்த காலத்தில், எந்தவித தடங்கலும் இன்றி, பாலிசியின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, காப்பீடு பாதுகாப்புடன் பாலிசி நடைமுறையில் உள்ளது போல் கருதப்படும். இந்தக் கருணைக் காலமானது, ஆண்டு, அரையாண்டு மற்றும் காலாண்டிற்கான பிரீமியம் செலுத்தும் வீதத்திற்கு 30 நாட்களும் மற்றும் மாத பிரீமியம் செலுத்துவதற்கு 15 நாட்களும் அனுமதிக்கப்படுகிறது.
- இது ஒரு பியூர் டெர்ம் காப்பீட்டுத் திட்டம், எனவே முதிர்வில் எந்த நன்மைகளும் வழங்கப்பட மாட்டாது.
- பிரீமியங்களை நீங்கள் ரொக்கமாக, காசோலையாக அல்லது வரைவோலையாகச் செலுத்த முடியும்.

## புதுப்பித்தல் (ரிவைவல்)

ஒரு காலாவதியான பாலிசியை, பாலிசி காலத்திற்குள், ஆனால், செலுத்தாத முதல் பிரீமிய நாளில் இருந்து 5 வருடங்களுக்குள், அதாவது புதுப்பித்தல் காலம், புதுப்பித்துக் கொள்ளலாம், புதுப்பித்தலானது நிறுவனத்தின் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட நடப்பில் இருக்கும், எழுத்துக் காப்புறுதி (அன்டர்ரைட்டிங்) பாலிசியின் படி, தொடர்ச்சியாக காப்பீடு செய்து கொள்ள முடியும் என்பதற்கான ஆதாரத்தை நிறுவனத்தின் திருப்திக்கு ஏற்ப சமர்ப்பிப்பதற்கு உட்பட்டும் புதுப்பித்தல் ரொக்கத்தின் அடிப்படையிலும் மற்றும் செலுத்தாத அனைத்து உரிய பிரீமியங்களை செலுத்துவதற்கு உட்பட்டும் அமையும். குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட எழுத்துக் காப்புறுதி (அன்டர்ரைட்டிங்) வழிகாட்டுதல்களின்படி ஒரு காலாவதியான பாலிசியை புதுப்பிக்கும் உரிமையை நிறுவனம் தக்க வைத்துள்ளது.

## நீக்குதல்கள்

பாலிசியின் கீழ் காப்பீடு துவங்கிய அல்லது புதுப்பித்தல் நாள் முதல் 12 மாதங்களுக்குள் ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளரின் மரணமானது தற்கொலை மூலமாக இருந்தால் மற்றும் பாலசி நடப்பில் இருப்பதற்கு உட்பட்டு, நாமினி அல்லது பாலிசிதாரரின் பயனாளர். மரண நாள் வரை செலுத்திய மொத்த பிரீமியங்களின் குறைந்தபட்சாம் 80%ஐ அல்லது மரண நாளில் உள்ள சரன்டர் மதிப்பு, இதில் அதிகமானதை பெற தகுதி பெறுகிறார்.

## இலவச பார்வைக் காலம்

பாலிசி ஆவணம் கிடைக்கப் பெற்ற நாளில் இருந்து 15 நாட்களுக்குள் விதிகள் மற்றும் நிபந்தனைகளை மதிப்பாய்வு செய்யும் உரிமை உங்களுக்கு உள்ளது. ஒரு வேளை நீங்கள் உங்கள் பாலிசியை திரும்ப அனுப்பினால், நீங்கள் செலுத்திய பிரீமியமானது, முத்திரைத்தாள் செலவுகளை அட்ஜஸ்ட் செய்து கொண்டு திரும்ப வழங்கப்படும்.

## ஒப்புதல்

காப்பீடு ஒப்புதல் மற்றும் முழுமையான பிரீமியம் கிடைக்கப் பெறும் வரை அவிவா, எந்த இழப்பீடு கோரல்களுக்கும் பொறுப்பாளி ஆகாது.

## அவிவாவுடன் ஏன் முதலீடு செய்ய வேண்டும்?

அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் என்பது டாபர் இன்வெஸ்ட் கார்ப் மற்றும் அவிவா இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட், ஒரு யூகேவை அடிப்படையாகக் கொண்ட ஒரு குழு, அதவுடனான இந்திய உறவு 1834 வரை பின்நோக்கிச் செல்லும், ஆகிய இரண்டின் கூட்டுறவு ஆகும். அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸை தேர்ந்தெடுத்ததன் மூலம், நீங்கள் உலகின் பழமையான காப்பீட்டுக் குழு ஒன்றின், அதன் வரலாறு 1696 வரை பின்நோக்கிச் செல்லும், நிர்வாக அனுபவத்தைப் பெறுகிறீர்கள். இன்று. அவிவா 33 மில்லியன் வாடிக்கையாளர்களை 16 சந்தைகளில் (2016) கொண்டுள்ளது.

1884 இல் தோற்றுவிக்கப்பட்டது, டாபர் இந்தியா லிமிடெட், டாபர் நிறுவனத்தின் முதன்மை நிறுவனமானது, இந்தியாவின் பழமையான மற்றும் பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். இது பாரம்பரிய சுகாதாரப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்.

காப்பீட்டுச் சட்டம், 1938, பிரிவு 38 மற்றும் 39 இன் கீழ் உளள ஷரத்துக்கள் மற்றும் அவை அவ்வப்பொழுது திருத்தப்படுவதற்கு உட்பட்டு **அசைன்மென்ட் மறறும் நாமிநேஷன்** பாலிசியின் கீழ் அனுமதிக்கப்படுகிறது.

## பிரிவு 41

காப்பீட்டுச் சட்டம் 1938,(1) பிரிவு 41 இன்படி காப்பீட்டாளரின் அட்டவணை அல்லது வெளியிடப்பட்ட விற்பனை அறிக்கையில் அனுமதியளிக்கப்பட்ட தள்ளுபடியைத் தவிர எந்த ஒரு நபரும், நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்த ஒரு நபரையும் எந்தவித ஆயுள் அல்லது இந்திய நாட்டில் உள்ள சொத்துக்களை காப்பீடு செய்து கொள்ள, தொடர, புதுப்பிக்க அல்லது புதிதாக எடுக்க, முழுமையாக அல்லது பகுதி கமிஷனை அல்லது பாலிசியில் கூறப்பட்டுள்ள பிரீமியத்தில் தள்ளுபடி செய்து தூண்டக் கூடாது அல்லது எந்த ஒரு நபரும் ஒரு பாலிசியை எடுத்துக் கொள்ள அல்லது ரெனிவல் செய்ய, அல்லது தொடர்வதற்கு எந்தவித தள்ளுபடியையும் பெறக் கூடாது.

(1) இந்த உட்பிரிவின் அர்த்தத்தின்படி, காப்பீடு அளிப்பவர் அமர்த்தி இருக்கும் ஒரு முகவர், பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்படி அவர் நம்பிக்கையுள்ள ஒரு காப்பீட்டு முகவர் என்பதை தெரிவிக்கும் பொழுது, பிறகு ஒரு ஆயுள் காப்பீட்டு பாலிசியை அந்த காப்பீட்டு முகவர் தன் பெயரில் தன் ஆயுளுக்காக எடுத்துக் கொண்டு அதன் மூலம் அவர் கமிஷனைப் பெற்றுக் கொண்டால், அது தள்ளுபடியைப் பெற்றதாக ஆகாது.

(2) இந்த ஷரத்துக்களின் விதிமுறைகளைப் பின்பற்றுவதில் எந்த ஒரு நபராவது தவறினால், அவருக்கு அபராதம் 10 இலட்சம் வரை நீட்டிக்கப்படும்.

## பிரிவு 45

காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 45 இன்படி, மற்றும் அவ்வப்பொழுது மாற்றத்திற்கு உட்பட்டும், தவறான கூற்றின் அடிப்படையில் பாலிசியை 3 வருடங்களுக்குப் பிறகு திரும்ப அழைக்க முடியாது.

## கேள்விகள் மற்றும் புகார்கள்

ஒரு வேளை உங்களுக்கு மேலும் விவரங்கள் தேவைப்படுமாயின் அல்லது வேறு ஏதாவது கேள்விகள் அல்லது புகார்கள் இருப்பின், தயவு செய்து பின்பக்கம் அளித்துள்ள எண்களில் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்


AVIVA

| Life Insurance |

*டாபர் இன்வெஸ்ட் கார்ப் மற்றும் அவிவா இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.*

**அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

**தலைமை அலுவலகம்:** அவிவா டவர், செக்டார் ரோடு, கோல்ஃப் கோர்ஸ் எதிரில், DLF ஃபேஸ் - V, செக்டார்-43, குர்காவ் - 122 003, ஹரியானா, இந்தியா

தொலைபேசி எண்: +91 124-2709000, ஃபேக்ஸ் எண்: +91 124-2571210, இணையதளம்: www.avivaindia.com, மின் அஞ்சல்: customerservices@avivaindia.com

**பதிவு அலுவலகம்:** 2வது மாடி, பிரகாஷ்தீப் பில்டிங், 7, டால்ஸ்டாய் மார்க், புது தில்லி - 110 001, இந்தியா.


போலியான தொலைபேசி அழைப்பு மற்றும் கற்பனையான / மோசடியான சலுகைகளில் இருந்து ஜாக்கிரதை: IRDA ஆஃப் இந்தியா பொதுமக்களுக்கு தெளிவு படுத்துவது என்னவென்றால்:

- IRDA ஆஃப் இந்தியா அல்லது அதன் அதிகாரிகள், எந்த விதமாக காப்பீடு அல்லது நிதித் திட்டங்கள் அல்லது இன்வெஸ்ட் பிரீமியங்கள் ஆகியவற்றின் விற்பனை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை.
- IRDA வ் இந்தியா எந்தவித போனஸ் அறிவிப்புகளையும் வெளியிடுவதில்லை. அப்படிப்பட்ட தொலைபேசியை பெறும் பொதுமக்கள், தொலைபேசி அழைப்பின் விவரங்கள் மற்றும் எண் ஆகியவற்றைக கொண்டு காவல் துறையில் ஒரு புகாரைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


அவிவா ஜன சுரக்ஷா - ஒரு தனி நபர் இணைப்பு இல்லாத பங்கு பெறாத பியூர் ரிஸ்க் லைஃப் இன்ஸ்யூரன்ஸ் பிளான். மேலே அளிக்கப்பட்டுள்ள வர்த்தகச் சின்னம் அவிவா பிராண்ட்ஸ் லிமிடெடுக்கு சொந்தமானது மற்றும் அது உரிமம் பெற்று அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டால் வழங்கப்படுகிறது. வரி நன்மைகள் நடப்பில் இருக்கும் வரிச் சட்டத்தின்படி அமையும் மற்றும் அவை மாற்றத்திற்கு உட்பட்டது.



UIN: 122N021V02, MKT/December 2015/Ver. 1.4, Advt. No.: Sep 34/19.